தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸு வைகாசிமீ 4உ (17-5-'22.) | ப. 4.

ச ஞ் சீ வா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை	வலி	தேள்	கடி	பல்	நோவு
மார்		பாம்புக்		கால்	
முதுகு		பூச்சிக்		காது	
இடுப்பு		விஷக்		கை	

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணு எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

சுதேசியமானது! உபயோகமானது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தபால் கூலியுள்பட சந்தா
ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0
'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

மகாகவியும் மகாத்மாவும் 26
லாயிட் ஜியார்ஜ் 27
தமிழ் துறந்த தமிழோர் 28
ம-ா-ா-ஸ்ரீ C. K. கோவிந்த ரூவ் அவர்கள், B. A., L. T.
பூமியின் பிறப்பைப்பற்றிய சில கொள்கைகள் 29
ம-ா-ா-ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி அய்யர் அவர்கள், B. A., B. L.
எங்கள் வீட்டுக்கூடம் 30
இரு முறை பிறந்த அரசன் 31

தமிழ் உலகு

துந்துபி௵ வைகாசி௴ 4௳.

மகாகவியும், மாகாத்மாவும்.

சைனா தேசத்தில், சிறுவர்களாலியற்றப்பட்டு வரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகையில், மகாத்மா காந்தி, டாக்டர் ரவீந்திரநாத் டாகூர், இவர்களின் விஷயமாய்ப் பின்வருமபிப்பிராயங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. இக்காலத்தில், சைனாவிலும் ஓர் பெரிய கிளர்ச்சி யெங்கும் பரவி வருவதால் அங்கே நம்மைப்பற்றி யென்ன நினைக்கின்றார்களென்பதை நாமறிய ஆசைப்படக்கூடும். ஆதலால் இதை நாம் இங்கு விவரிக்கின்றோம்.

நமக்கும் நம்முடைய க்ஷேமத்திற்கும் நடுவிலிருக்கும் இடையூறுகள் எண்ணுவதற்காகாதவை. இவைகளைக் கடந்து கடைத்தேறுவதே இப்போது நாம் துணிந்த கருமம். கடப்பதென்றால் எப்படி? எப்பொழுதாவது நாம் உயர்ந்த பதவியையடையவேண்டுமாகின், நாம் நம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். எங்ஙனம் நாம் மானமிழந்து விட்டோம், என்ற கேள்வி பிறக்கலாம். சுமார் மூன்று வருஷகாலமாக, இந்தியாவின் நிமித்தம், கடும் நிஷ்டையிலிருக்கும் முனிவனைப்போல், மகாத்மா காந்தி ஓயாது உழைத்து வந்ததைக் கண்ணுற்கண்டும், விஷயங்களறியாதவர்கள் நமக்குள் இருக்கின்றார்களென்று நாம் நினைக்கவில்லை. எடுத்ததற்கெல்லாம், நமது யஜமானர்களாயிருக்கும் ஆங்கிலேயர்களை நம்பாமல், நாம் இதுகாறுமென்ன செய்துவிட்டோம்? படைத்தவன் நமக்களித்த, வன்மை மிகும் வலது கையை மறந்து, வறுமையால் வருந்தித் தவிக்கும் நமக்கு கௌரவம் வைப்பவனும் மூடனென்றே தூறப்படுவான். உழுது உண்டுவாழாமல், பிறர்களைக்கும் வண்ணம் தொழுது உண்ணும் நமக்கு, மானம் என்று பேச வெட்கமும் போய்விட்டதோ? பொருள் தேவையெனில், நாமே அதைத் தேடிச்செல்வோம். நாம் நம் மரியாதையை யிழந்ததுபற்றி, மகாத்மா காந்தியும், டாக்டர் ரவீந்திரநாத் டாகூரும் மிகவும் பரிதாபப்படுகின்றார்கள். நமக்கு நாமே துணை யென்பது தான் இதுவரையில் இவர்கள் நமக்குச் செய்து வந்த உபதேசம். நம் இந்தியா சுயேச்சையைப் பெறுவதற்கு, இவர்கள் நமக்குக் காட்டும் வழி தனிவழியே. ராஜாங்கத்தில் நமக்கு ஆங்கிலேயர்கள் மேன்மேலும் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்பதை இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. சட்டசபைகளிலும், நிர்வாக சபைகளிலும், கவர்மெண்டார், முன்னிலும் தாராளமாகப், படிப்பிற்றேர்ந்த இந்தியர்களைக் சேர்த்துக் கொண்டாலும், கோடிக்கணக்காய்த் திரண்டுநிற்கும் நம்மேழை ஜனங்களுக்கு அதினால் பிரயோஜனம் என்ன? வாயில்லாப் பூச்சிகளாக நசிக்கும் முப்பது கோடி பாமரர்களுக்கு முக்தி கிடைப்பது எவ்விதம்? இதற்காகவே நம் மகாத்மாவும் மகாகவியும், இன்றுவரையில், நம்மை எக்காலமும் அன்னியர்களின் கையிற் சிறைபடுத்திய நம்பொல்லா வழக்கங்களை நாமுடனே அகற்றவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இவ்வுலகத்தின்கண் இந்தியா என்ற ஒருதேசம், நிகரில்லாது, என்றைக்கும் ஓர் திவ்யமான கீர்த்தியுடன் விளங்கக் கூடுமாகில், நாம் நமது தீயவழக்கங்களை யொழித்தாலன்றி, இப்பெருங்காரியம் ஒருபோதும் நிறைவேற மாட்டாது. இதையே இவ்விருவரும் சொல்லுகின்றார்கள். இந்தியாவில் ஸ்வராஜ்யமென்பது நிஜமாகவே செழிக்கவேண்டுமென்றால், எல்லாவற்றிலும் பயம் எனசொல்லப்படுவது நம்மை விட்டகலவேண்டும். ஒவ்வொருவரும் மேலான நோக்கங்களுடன், பயமின்றி, அவைகளைக் காரியத்தில் நடத்துவது அவசியம். கற்றறிந்த நமக்கு இவை பழகாகுமா, வென நம்முடைய மனஸ்ஸாக்ஷி நம்மைக்கேட்குங்கால், தைரியத்தை விடாது, ஒழுங்கான மார்க்கத்திலேயே செல்ல நாம் மனத்தென்பை சம்பாதிக்கவேண்டும். பிறருக்கு நடுங்குவது அடிமைத்தனமென்றாலும், செல்வம் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் பொழுது, நாம் பிறரை மரியாதையின்றி நடத்துவதும் அடிமைத்தனமே. பஞ்சத்திற்கிடந்து வருந்திய ஏழைகளை மிகுந்த ஆஹாரத்தினின்றும் பாதுகாப்பதற்கு நாம் சிரத்தையெடுத்துக் கொள்வது முக்கியம். அதைப்போலவே, இதுவரையில் பிறரைத் தொழுதுண்டு வந்த நாம், ஸ்வராஜ்யம் என்ற பொக்கிஷம் நமக்கெட்டியவுடன் மதம் பிடித்து, கொடுங்கோன் மன்னர்களென்ற பெயரெடுக்காமல், காலம் கழிப்பது மிகவும் கஷ்டமே. ஸ்வராஜ்யமென்றால், நாம் பிறருக்கஞ்சாமல் நடக்கவும், மேலும் நம்மிடத்திலும் தலைவணங்காது நடப்பவர்களிடம் நாம் கௌவரப் பாராட்டவும் வேண்டும். இவ்வரிய குணங்கள் நமக்கில்லாவிடில், நம்தேசம் முற்றிலும் முன்னேறக் கூடுமென்று மாகாத்மா காந்தியும், டாக்டர் ரவீந்திரநாத் டாகூரும் எதிர்பார்க்கவில்லை.

ஆகவே நாம் ஒருவருக்கு ஒருவர் இனிமேல் அஞ்சாது அன்புடனும், ஒற்றுமையுடனும் இத்தேசத்தில் வாழவேண்டும். எவனும் நம்மை யடக்க முடியாமல், கேவலம் சத்தியத்தாலும், காருண்யத்தாலும் மாத்திரம் கட்டுப்பட்டவர்களாக 'அச்சம் தவிர்த்து' குன்று போல் நிமிர்ந்து நிற்க, நாம் (நம் இந்தியாவுக்கு) கடைமைப்பட்டிருக்கிறோம். பயமென்பது நம் மனதைவிட்டு முழுவதும் அகலவேண்டும். இதைத்தான் இவ்விருவரும் ஓயாது நமக்குப் புகட்டிவருகின்றார்கள். உத்தியோகமும் அதின் விமரிசையும், நம்மால் பார்த்ததும் மோகிக்க தக்கதாயிருந்தும், அவ்வ-

களில் கொஞ்சமும் ஈடுபடாமல், இருப்பவர்கள் இவர்களே. ராஜ்யகாரியத்தில், ஸ்தானமும் பெருமையும், ஆயிரம் தானிருப்பினும், அவைகள் பிரபுக்களின் கிருபையால் கிடைக்கும் பிக்ஷையும், தக்ஷிணையுமே தவிர வேறு ஒன்றுமில்லையென இவர்கள் கருதுகின்றார்கள். நம்முடைய தீவிரமான தபோமகிமையால் தான் நமக்கு ஸ்வராஜ்யமென்ற மோக்ஷம் கிடைத்தல் தகும். இதுவே இவர்களின் பிரதானமான கொள்கை. எதையும் தானம் வாங்குவது நமக்கு தர்மமல்ல. ஆ! விலையற்றதான ஸ்வராஜ்யமென்பதையோ பின்பு, பிறர் கொடுக்க நாம் எடுத்துக்கொள்வது!

லாயிட் ஜியார்ஜ்

அவர் இப்படி ஆளுவது ஏன்?

உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் முதல் மந்திரியாயிருக்கும் இவரைப்பற்றி எல்லோரும் வியந்து பேசுவதற்குக் காரணம் என்ன? எல்லா தேசங்களிலும் இவர் ஸ்மரிக்கப்பட்டு வருவது ஏன்? ஓர் இரகசியம் இவரிடம் இருக்கத்தான் வேண்டும். அது என்ன? இதைப்பற்றி ஸர் ஹால் கெயின் என்பவர் ஆச்சரியமாக எழுதியிருக்கிறார். அவர் சொல்வதாவது:

இவரிடத்தில் அளவற்றதோர் மதிப்பு எங்கும் உண்டானது ஏன் என்றால், இவர் அதிபால்யத்தில் இப்பெரும் பதவிக்கு வந்ததே. எங்கேயோ ஓர் ஊரில், ஓர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து, ஓர் சிறிய வக்கீலாக யிருந்து, குடியானவர்கள் பரம்பரையிலுதித்த இவர் இங்கிலாண்டில் பிரதம மந்திரிஸ்தானத்திற்கு வந்திருக்கிறார் எனில், இவரிடம் ஏதாவது ஓர் அருமையான குணம் இல்லாதிருக்குமா? என்ன ஆச்சரியம்! ஐரோப்பாவில் மகா யுத்தம் நடந்த ஐந்து வருஷ காலத்தில், ராஜ்யத்தையே தனது உள்ளங்கையில் அடக்கினவர் போல், எல்லாக் காரியங்களையும் பார்த்துவந்த இவர் ஓர் அருமையான மனுஷ்யராக எண்ணப்படுவதில் நாம் ஏன் வியப்படையவேண்டும்? பல நூற்றாண்டுகளாக லாயிட் ஜியார்ஜைப்போலக் குடிசையிலிருந்து அரண்மனையில் குதித்த ஒருவனும் இங்கிலாண்டில் உண்டாகவில்லை. ஹைதர் ஆலி, நெப்போலியன் இவர்களைப் போன்றவர்கள், சாதாரணமாக யிருந்து, பிறகுப் பிரபலமாக ஆனார்களென்றால், அவர்கள் போர்வீரர்கள். யுத்தத்தில் வென்று ஸிம்மாஸனத்தில் உட்காருவது இவர்களைப்போலொத்தவர்களுக்குப் பெரிதல்ல. ஆனால் பார்லிமெண்டு என்னும் போர்க்களத்தில் சண்டை செய்து இந்நிகரில்லாப் பதவிக்கு வந்தவர் இவரே.

சாமர்த்தியசாலிதான்! அதுமட்டுமல்ல. அவருடைய முகவெட்டும், இவருக்குப் பெருந்துணையாயிருந்து வந்திருக்கின்றது. பார்த்த மாத்திரத்தில் எவனும் இவர் வலையிற் சிக்கிக் கொள்வான். அவ்வித சக்தி இவரிடம் குடிகொண்டிருக்கின்றது. முகவெட்டு என்றால் படிப்பும், அந்தஸ்தும், பிரபலமான புத்தியுமா வேண்டும்? நமக்கப்படித் தோன்றவில்லை. மனிதர்களிடத்தில் இன்றியமையாததான விஷயம் ஒன்று உண்டு. எவனையும் தன்னிடம் மோஹிக்கச்செய்வது அதுதான். அதை ஹிருதயம் என்று சொல்வார்கள். படிப்பில்லாதவன், அந்தஸ்தற்றவன், புத்திஹீனன் என்று பெயரெடுத்தாலும், சீ! இவன் ஹிருதயமற்றவன், என்று மாத்திரம் ஒருவன் பெயர் வாங்குவானாகில், அவனுக்கு ஒன்றும் உதவமாட்டாது. மேலும், ஒருவன் முன்னிற்கு வரவேண்டுமாகில், அவன் மனுஷ்யர்களிடம் மனுஷ்யனாகப் பழகவேண்டும். ஒருவன் என்னதான் படித்திருந்தாலும், அவனுக்கு எவ்வளவு மகத்தான அந்தஸ்து வாய்த்திருப்பினும், அவன் மனுஷ்யர்களுடன் மனுஷ்யனாகப்பழகாத பக்ஷத்தில் எல்லோரும் அவனுக்கு ஈடுபடமாட்டார்கள். ஸத்தியத்தில் ஹரிச்சந்திரன், சௌர்யத்தில் ராமன், தபஸில் வசிஷ்டர், இவர்களைப்போலிருந்தால், பெரும்பாலும் மனிதர்கள் அவனை அணுகமாட்டார்கள். இவன் உத்தமன் என்று சொல்லி ஒதுங்குவார்களேயொழிய நெருங்கிப் பழகிப் பிரியத்தால் இவனிடம் கட்டுப்படுவதற்குக் காரணமில்லை. தூரத்தில் நின்று, கைகட்டி, வாய் பொத்தி நிற்பவர்களால் பூஜை செய்யப்பட்டு வருவது ஒன்று. ஆனால், தெருவில் கறிகாய்கள் விற்கின்றவர்கள் முதல் தொண்டமான் வரையில் ஒருவனைப்பார்த்து திகைத்து நிற்கின்றார்களென்றால், அவன் எல்லோரிடமும் ஸஹஜமாகப் பழகியிருத்தல் வேண்டும். மனுஷ்யர்களின் நடுவில் சமாளிக்க அநேகருக்கு சாமர்த்தியமில்லை. கலகலப்பாகப் பழகுவதும் ஓர் மிக்க அபூர்வமான குணமே. லாயிட் ஜியார்ஜ் இக்குணம் வாய்ந்தவர். யார் இவரைப் பார்த்தபோதிலும் நம்மைப் போலவே இருக்கிறார் என்று எண்ணுகிறார்களே தவிர, இவர் மனித உருவத்துடன் வந்த தேவன் என்று ஒருவரும் திடுக்கிட்டு ஒதுங்குவதில்லை. இது தான் பரம இரகசியம். ஈசுவரனிடமிருந்து தான் வரம்பெற்று வந்திருப்பவர் என இவர் என்றைக்கும் சொல்லிக் கொண்டவரில்லை. எவரிடமும் இவர் பேசுங்கால், இவரது வார்த்தைகள் நயமே உருவெடுத்து வந்ததுபோல் தோன்றும். மிருதுபாஷிகளில் இவர் நிகரற்றவர். ஆனால்— கிரைஸ்டைப்போல வலது கன்னத்திலடித்தால், இவரும் இடது கன்னத்தைக் காட்டுபவரோ!— எவனும் அப்படி நடக்கக்கூடு மானாலும், இவர் சற்று நிதானத்துடன் தயங்கக்கூடியவர். சளைக்காமல் எதிர்த்து நிற்பவனை யார் தான் கொண்டாடமாட்டார்கள்? பார்லிமெண்டு என்னும் யுத்தகளத்தில் தளராமல் சண்டை செய்பவர்களில் இவரே முதன்மையானவர். இவருக்குத்தோல்வியென்பதே தெரியாது. என்றால், தோல்வியடைந்து விட்டதாக ஒரு போதும் ஒப்புக்கொள்ளமாட்டார். என்னதான் அடிபட்டாலும் கீழே மாத்திரம் ஒரு போதும் விழமாட்டார். வீழ்கின்றவனைப்போல் நடித்தாலும் எதிரிகள் கண்மூடிக் கண் திறக்குமுன், எழுந்து நின்று, இரு கரங்களையும் ஓங்கி நிற்பார். 'சுழுந்த அடி' என்பதை இவர் என்றும் பட்டதில்லை. ஆனால் இதைப்பிறர்க்கு ஏராளமாகக் கொடுத்திருக்கிறார். மேலும், இவருக்குக் கக்ஷியென்பது தெரியாது.

ஜயமடைந்தவுடன், கலகலப்பாய் உத்ஸாகத்துடன் இருக்கின்றவரே தவிர, ஒருபோதும் குடித்தவன் போல் தானடைந்த பெருமையால் மயங்கமாட்டார். பதவியால் கெட்டுவிட்டான் என்று இவரைப்பற்றி யாரும் சொல்ல முடியாது.

இவரைப்பலர் ஓர் பெரிய மாந்த்ரீகனெனச் சொல்லுகின்றார்கள். ஏனெனில் இவர் செய்துவரும் காரியங்கள் அனைத்தும் மந்திரத்தால் செய்யப்பட்டவைகளாகத் தோன்றுகின்றனவே யொழிய, வேறு இல்லை. எவ்வளவோ ஆபத்துக்களிலிருந்து தன்தேசத்தை இவர் விடுவித்திருக்கின்றார். இங்கிலாண்டில் கட்சிப்பிரதி கட்சிக்குள் மனஸ்தாபங்கள் மிகவும் அபாயகரமாக ஆகும்போதும், இவரைப்பார்த்தமாத்திரத்தில் அவை யெல்லாம் பனி போல் மறைந்துவிடுகின்றன. உடனே எல்லாம் சரியாக ஆகிவிடுகின்றது! பிரான்ஸ், இங்கிலாண்டு, இடலி, இவைகளுக்குள் மனஸ்தாபங்கள் வரும் போது இவர் எல்லா தேசங்களிலிருந்தும் ராஜ்ய

தந்திரிகளை ஓர் ஸமாஜத்துக் கழைத்தாரேயாகில், எல்லாச் சச்சரவுகளும் பறந்துவிடுகின்றன. இவ ரைப்பார்த்து எல்லோரும், 'என்ன மனுஷியர்!' என்று வியப்படைகின்றார்கள்.

உலகத்தில் பெரியவர்களிடம் காணப்படும் புத்தியின் குணங்கள் இவரிடமும் உண்டு. இந்தவிஷயத்தை ஆங்கிலேயர்களைக் காட்டிலும் மற்ற ஐரோப்பியர்கள் நன்கறிவார்கள். அவர்கள் இவரிடம் மிகவும் ஆச்சரியப்படுவது என்னவெனில், நிரம்பவும் படிப்பவராயில்லாமலே இவருக்கு யாவும் எவ்விதம் தெரிகின்றது என்பதே. இவருடைய சிநேகிதர்கள் இவரைப்பற்றி 'இவர் மனது வைத்தால் படிக்கக்கூடியவர்தான். ஆனால் நாங்கள் இவர் படித்துப்பார்த்ததில்லை' யென்பார்கள். ஆகிலும் இவருக்குத்தெரியாத விஷயமொன்றுமில்லை. எட்டு வருஷங்களுக்கு முன் அயல்நாட்டு விஷயங்களில் இவருக்கு உயர்ந்த அறிவு இல்லாதிருப்பினும், தற்காலத்தில் பிரான்ஸ், இடலி முதலிய தேசங்களைப்பற்றி அந்நாடுகளின் ராஜ்ய தந்திரிகளைக்காட்டிலும் அவைகளின் விஷயங்களில், இவர் தேர்ச்சி அடைந்திருக்கிறார். 'காமன்ஸ்' ஸபையை, மிகவும் விளையாட்டாக ஆட்டிவைப்பார். அவர் பேசினால் எதிரிகள் வாயடைத்துப் போவதுமன்றி, இவர் சொல்வதுதான் சரியே என்று பிரமித்து இவர் சொல்வதுதான் சரியே என்று பிரமித்து இவர் பக்கமே சாய்ந்திடுவார்கள். வயிறு வலிக்கும்படி சிரிக்கச் செய்வதும், பின்பு ஆகாயத்தை அளாவி நிற்கும் உருக்கமுள்ள வார்த்தைகளால் எல்லோரும் கலங்கச்செய்வதும், இவருக்கு ஓர் லீலையே.

தமிழ்துறந்த தமிழோர்.

(C. K. கோவிந்தராவ் அவர்கள் B. A. L. T.)

ஐயன்மீர்,

அடியேன் தமிழ் நாட்டில் பிறந்துவளர்ந்தேனாயினும் வயிற்றுப்பிழைப்பிற்காக வடதேசத்தில் குடியிருக்கின்றேன். உத்தரசர்க்கா ரெனப்படும் கஞ்சம் முதல் கிருஷ்ணாதீரம் வரையிலும், மற்றும் குண்டூர் நெல்லூர் ஜில்லாக்களிலும், என்போன்ற பலருளர். அப்போதைக்கப்போது இந்நாட்டின்கண் வாழும் தமிழர் தம் வரலாறும் தமிழுலகத்தோர்க்குப் பயன்படும் இந்நாட்டோர் தம் வரலாறும் தக்கசமயத்தில் தெரிந்த மட்டும் தெரிவித்தற்குக் கடமை செலுத்த விடைகோருகிறேன்.

ஆயினும் இக்காலத்தில் இந்தப் பிரதேசங்களில் குடியிருக்கும் தமிழர் போலல்லாது சுமார் 9 நூற்றுண்டுகளுக்குமுன் இராஜ இராஜ சோழன் படையெடுத்து வடதேசத்தில் தமிழ்க்கொடி நாட்டிய காலத்தில் இங்கு வந்ததமிழோர் தமிழர் தம் சிறப்பை வளர்த்தவர்கள். உயர் வீரம் செழிந்தோர். அனேக இடங்களில் கிருஷ்ணா கோதாவரி நதிகளின் பாய்ச்சலுள்ள மிக்க வளமான வயல்கள் கிராமங்கள் இனம் பெற்று குடியேறி தமிழ் நாட்டின் யெல்லையை தமிழ்நசைக் கப்பால் பல யோசனைக்குப் புறத்தும் பரப்பினர். அத்தகை மைத் தமிழோர் பெருமை அவர்தம் சந்ததியாரின் தற்காலசிறுமையினும் நன்கு விளங்கும். தற்காலத்தியர் எக்கேடுறினும் கெடுக உயர்மை அவர்தம் விளங்க முன்னோர் வழங்கிய செல்வம் கல்விச்சிறப்பிலும் மதநூல்களிலும் குறைபாது நிற்கின்றனவல்லவா? மென்மேலும் விருத்திசெய்ய நம்மவர் இதுகாறும் தக்க முயற்சி செய்யாவிடினும் முன்னடைந்த நிலைமையை, தாம் குறியினும், அதைக் குறைக்க வொண்ணுத் தன்மையினன்றோ நாம் பெறுமை நடாத்துவது! இந்நிலைமையின் கொடுமை விசாகபட்டணத்திற் கருகாமையிலுள்ள சிம்மாசலம் எனப்பேர் பெற்ற புண்ணிய க்ஷேத்திரத்தின்கணுள்ள அந்தணரைப் பார்க்கையில் நெஞ்சம் புண்பட விளங்கும். சிம்மாசலஸ்தலம் இக்காலத்தில் வராகலட்சுமி நரசிம்மஸ்வாமிக்கு ஸ்தாபனையுற்றுளது. பௌத்தர் சூமணர்கள் பிரபலித்த காலங்களில் இம்மலை அவர்களால் உபயோகப்பட்டதெனப் புலப்படுகிறது. அதிரமணீயமானது. அருவிகள் பாய்ந்தும் செழிக்கும் மண்நிறைந்த சாரலும் பெற்றது. தினந்தோறும் கணக்கற்ற பக்தர்கள் தரிசிக்கும் பவித்திர க்ஷேத்திரம். இவ்வாலயத்தில் வைஷ்ணவர் பூசாரிகள். இவர்கள் நடையுடை யொழுக்கம் தமிழரது. ஆனால் தமிழ் பாஷையைத் துறந்தவர்கள். திருவாய்மொழியைத் தெலுங்கில் அச்சிட்டு தமிழ் வார்த்தைகளை யெல்லாம் தெலுங்கு ஒலியுடன் இசைத்துத் திருவாய் மொழியைப் பழிப்பவர்போல் அமைத்துள்ளார். தமிழை முற்றிலும் மறந்து தெலுங்கு பேசுகிறார்கள்.

வைஷ்ணவர்கள் நிலைமையிதுவாயின், சைவர்கள் இதைவிடக் குறைந்தோர். வைஷ்ணவர்களாவது தென்மொழியிலுங் கூட மதநூல்கள் பெற்ற பேற்றினால் பிரபந்தங்களையாவது, பொருளறிந்தும் அறியாவிடினும், பாடித்தமிழின் மாட்சிமையை ஒருவாறாக வெளிப்படுத்து கிறார்கள். சைவர்களுக்கு அப்பேர்க்கொத்த அவசியம் இல்லாமல் தமிழ்வார்த்தையைக் கெடுத்தும் கேட்கிலார். ஆனால் அரவர்கள் என்றுமட்டும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பெண்பாலார் தென்தேசத்திலுள்ளார் போலயுடை உடுக்கிறார்கள். கலியாணமுதலிய சடங்குகளை தெற்கில் போலச் செய்கிறார்கள்.

ஆனால் வைஷ்ணவர்களும் சைவர்களும் தமிழ்பாஷை முற்றிலும் மறந்ததே யன்றி தமிழ் தேசத்தாரைப்பழித்தும் தென்தேசத்தார் இக்காலத்தில் இங்கு வரின் அதை சகிக்க இயலாதவர். "தெற்கத்தியார்" என்ற வார்த்தையே பழிப்பாக வழங்குகிறது. சாதாரணமாய் விசாரணை யற்றுப்பேசும் போதெல்லாம் "ஒரேதகசூணுதிவாடரா"—அடே தெற்கத்தியாண்டா— என்பார்கள். இவ்வாறாக த்தமிழையும் தமிழரையும் துறந்த நம் சகோதரர்களின் நட்பும் பற்றும் மீட்க முயலுவது நன்றெனத் தோன்றுகிறது. அவ்வாறு செய்வது மிக எளிய தென நான் திடமாய் நம்புகிறேன். சற்றேறக்குறைய 16 வருடகாலமாய்த் தெலுங்குதேசத்தில் வசித்துளேன். என்னிடத்தில்இத்தேசத்தார் முற்றிலும் அன்புடையார். இன்னும் மற்றுசில தென்தேசத்தாரும் இவ்வாறு நட்புப்பெற்றுளர். யாவரும் ஒழுக்கத்தில் சரிவர நடப்பவரைத் தவறாது மதிக்கிறார்கள். ஆதலின் நமது நடக்கை நன்றாயின் நம்மவரைப்பற்றி அபிப்பிராயங்களையும் நன்குபடுத்தலாம்.

இவ்வாறு இந்துதேசத்திலும் புறநாடுகளிலும் வசிக்கும் தமிழ் நாட்டோரெல்லாம் ஒன்றுகூடின் தமிழ்நாட்டின் சிறப்பு உயர்ந் தோங்கும். நம்கல்வி ஆராய்ச்சி, அனுபவம் முற்றிலும் இம்முயற்சியில் செலுத்துவதை விட மனதிற்கின்பமான முயற்சி வேறில்லை.

தமிழர் நேசன்.

பூமியின் பிறப்பைப் பற்றிய சில கொள்கைகள்

(P. N. அப்புஸ்வாமி அய்யர் அவர்கள் B.A. B.L.)

பண்டைக் காலத்தில் பற்பல நாடுகள் நாகரிகத்திற் சிறந்து விளங்கின. ஆங்காங்கு அவ்வப்போது சிற்சில அறிவாளர் தோன்றித் தமது நாட்டுக்குப் பெருமை அளித்து வந்தனர். அவர் தமது வாழ்நாள் முழுதும் சிறந்த ஆராய்ச்சிகளிற் தலையிட்டுப் பல விஷயங்களின் நுட்பங்களை அறிந்து ஆய்ந்து தமது நாட்டினர்க்கு வெளியிட்டனர். "நமது பூமியானது எப்பொழுது எப்படி உண்டாயிற்று" என்னும் ஒரு வினா அடிக்கடி அவர்களது மனத்தில் எழுந்தது. தமது முன்னோர் அறிந்த விஷயங்களை எல்லாம் ஒழுங்கு படுத்தின தாமும் தமது புலன்களால் பல விஷயங்களையும் கவனித்து இவ்வினாவுக்கு விடை யளிக்க அவர் முயன்றனர். பூமியின் பிறப்பைப் பற்றிய விஷயம் புலனறிவால் மட்டும் தெரிந்து கொள்ளக் கூடியதல்ல. மேலும் அக்காலத்தில் புலனறிவைப் பெருக்கவல்ல துணைக் கருவிகள் ஒன்றும் கிடையா. ஆதலால் அவர் புலனறிவால் தெரிந்து கொண்ட சிற்சில விஷயங்களோடு புத்தியால் ஊகித்து நிர்மாணித்துக் கொண்ட பற்பல விஷயங்களை ஒட்டவைத்துப் பூமி இன்னவாறு உண்டாயிருக்கலாமென்று எண்ணிக் கொண்டனர். அவர் கொண்ட கொள்கைகள் அவர் காலத்தில் அவர் அறிந்திருந்த பிற விஷயங்களோடு முரண்படவில்லையாதலால் அக்கொள்கைகள் சரியான கொள்கைகள் தாம் என்று அவற்றைக் கையாண்டு வந்தனர். அவரவர் தோன்றிய நாட்டினர் அவர் எடுத்து கூறிய கொள்கைகளைப் பின்பற்றி வந்தனர். எனினும் சிற்சில நாடுகளில் நாளடைவில் புதிய அறிவு கிட்டக் கிட்ட அவர் பண்டைக் காலத்தில் கொண்ட கொள்கைகள் தவறாய் இருக்கலாமோ வென்று சிலர் ஐயமுறத் தொடங்கினர். சில நாடுகளில் இவ்வாறு ஐயமுறும் பெரியாரை நன்கு மதித்துக் கொண்டாடினர்; எனினும் அநேகமாக மற்ற நாடுகளில் எல்லாம் மதத்தையும் தெய்வத்தையும் இகழ்பவராகவே இவரை மதித்துக் கடும் துன்பத்துக்கு ஆளாக்கிவந்தார். இடர்ப் படுத்தும் இடையூறுகளைப் பொருட்டாக்காது மேல் செல்லுவது பெரியோரது குணமாதலின், பொதுஜன இகழ்ச்சி இவரது ஆராய்ச்சிகளைத் தடைப்படுத்த முடியாது போயிற்று. ஆனது பற்றிப் பழைய கொள்கைகள் போய்ப் புதிய கொள்கைகள் தோன்றிவந்தன. இவற்றின் உண்மையைக் காலம் செல்லச் செல்லப் பொது ஜனங்களும் உணர ஆரம்பித்தனர். வரவர அறிவைப் பெருக்க முயல்வோரைத் துன்புறுத்தும் கொடியவழக்கமும் தொலைந்தது. அறிவும் தடையின்றிப் பெருகிவந்தது.

பண்டைக் காலத்தில் இந்தியா, எகிப்து, பாபிலோனியா, கிரீஸ் முதலிய நாடுகளில் உதித்த அறிவாளர் யாவரும் பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் யாவற்றுள்ளும் தமது வாழிடமாகிய பூமியே மிகப்பெரிதானதென்றும். அதுதான் பிரபஞ்சத்தின் நடுநிலை என்றும், சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் முதலிய யாவும் பூமியின் நன்மையையும் அழகையும் நாடிப் பூமியைச் சுற்றி ஓடிவருகின்றனவென்றும், கருதி வந்தனர். ஆதலால் அவர் பூமியின் பிறப்பைப் பற்றிக் கொண்ட கொள்கைகள் யாவும் இந்தத் தவறான எண்ணத்தின் மீது கட்டப்பட்ட மனக்கோட்டைகள். அறிவு வளர வளர முதலில் பூமி நடுநிலையல்லவென்றும், பிறகு பிரபஞ்சத்துள்ள மிகப் பெரிய உலகங்களினிடையில் பூமி ஓர் அணுப்போன்றதேயென்றும், தெரிய வந்தது. தூரதிருஷ்டிக் கண்ணாடி (நெடு நோக்கி), ஸ்பெக்டிராஸ்கோப் (நிழல் நோக்கி), நுண்நோக்கி முதலிய கருவிகளின் உதவியால் பிற உலகங்களைப் பற்றிச் சிறிது சிறிது அறிய முடிந்தது. இவ்வாறு உண்டாகும் அறிவுக்கு ஒப்பப் பழைய கொள்கைகளை மாற்ற நேர்ந்தது. ஆதலால் பல கொள்கைகள் உண்டாகி உண்டாகி மாறிவந்தன. இக் காலத்திலும் நாம் மெய்யெனக் கருதி வரும் கொள்கைகள் தாம் சரியான கொள்கைகள் என்று கூறமுடியாது. அறிவாளர் சொல்லுவதென்னவெனில்: "நாம் அறிந்த விஷயங்களை ஒழுங்குபடுத்திப் பார்க்கும் போது நாம் எடுத்துக்கூறும் கொள்கைகள் சரியான கொள்கைகளாய் இருக்கலாமென்று தோன்றுகிறது. நமக்கு தெரிந்தவரையில் அவற்றில் பிசகு இருப்பதாகத் தெரியவில்லை; பிற்காலத்தில் எப்பொழுதாவது நாம் மேன்மேலும் விஷயங்களை அறிந்து வரும் போது இவை தவறான கொள்கைகள் என்று தோன்றினால், அப்பொழுது சிறிதும் வருத்தமின்றி இவற்றைக் கைவிட்டுப் புதிய கொள்கைகளைக் கையாளத் தயாராய் இருக்கிறோம்" என்பதே.

பூமியின் பிறப்பைப் பற்றிப் பழைய காலத்துக் கொள்கைகளிற் சிலவற்றையும், இக்காலத்துக் கொள்கைகளிற் சிலவற்றையும் சற்று சுருக்கமாகக் கீழே கூறுகிறேன்.

புராதன ஹிந்துக்களின் கொள்கை:—மனுஸ்மிருதி முதலான பழைய நூல்களில் பூமியின் பிறப்பைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறதின் சாராம்சம் வருமாறு. ஆதியில் இருண்டு, புலன்களுக்கு எட்டாது, அறிகுறி ஒன்றும் இல்லாது, ஊகிக்கக் கூடமுடியாத தன்மையை உடைய ஏதோ ஒரு வகைப் பொருள் ஒன்று எங்கும் பரவியிருந்தது. பிறகு கடவுள் தானாகவே தோன்றி இதனின்று நீரை உண்டாக்கி, அதில் பொன்மயமான ஒரு முட்டையை இட்டு அதனுள் தானே புகுந்து, அதனுள்ளிருந்து பிரமனாகத் தோன்றினார். அந்த முட்டையைப் பிரமன் இரு கூறாகச் செய்து ஒன்றினால் சுவர்க்கத்தையும் மற்றொன்றால் பூமியையும் நிருமித்தார். இவற்றினிடையில் ஆகாயத்தையும் எட்டுத் திக்குகளையும் வைத்தார். புராணங்களில் கூறப்பட்டிருக்கிற பூமியின் பிறப்பைப்பற்றியவிருத்தாந்தம் பெரும்பாலும் இதை ஒத்திருக்கிறதெனினும் ஆங்காங்கு சற்று விரித்தும் சுருக்கியும் மாற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பிற்காலத்திய வான சாஸ்திரிகள் தமது நூல்களில் எடுத்து கூறும்போது தாங்கள் இவற்றை ஒப்புக் கொள்கிறார்களென்றாவது ஒப்புக் கொள்ளவில்லையென்றாவது கூறுவதில்லை. இவற்றைக் கூறி இவற்றுக்கெல்லாம் புராணங்களே பிரமாணங்கள் என்று சொல்லிவிட்டுப் பின்பு இவற்றோடு சிறிதும் ஒவ்வாத தமது கொள்கைகளை விரித்துக் கூறுகின்றனர். "பண்டைச் சாஸ்திரங்களையும் இகழாது நவீன அறிவையும் ஒளியாது நடுவழியே செல்ல முயன்றனர் அவர்."

பண்டைக்கால எகிப்தர்களின் கொள்கை:—முதலில் உள்ளது நீர். அது தான் கடவுளின் இருப்பிடம். அதுதான் கடவுள். கடவுள் சூரியனை உண்டாக்கினார். சூரியன் நீரின்மீது மிதக்கும் ஒரு பிரகாசமான முட்டையாயிருந்தது. பிறகு முட்டையினின்றும் சூரியதேவன் தோன்றி வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார். பிறகு வாயுதேவனை உண்டாக்கி வானத்தை வளைவாகப் பூமியின் மேல் தூக்கிப் பிடிக்கச் செய்தார்.

பாபிலோன் தேசத்தாருடைய கொள்கை:—ஆதியிலுள்ளது எங்கும் நிறைந்த நீர். கடவுள்

அதனின்று பல தெய்வங்களை உண்டாக்கினர். டியமத் என்னும் தேவி ஆதி நீரின் அதிஷ்டான தேவதை. இத்தேவிக்கும் பிற தெய்வங்களுக்கும் கோரமான யுத்தம் நிகழ்ந்தது. இறுதியில் சமுத்திர தேவனது புத்திரனும் தேவசேனாபதியுமான மெரொடாக் என்பான் அவளைக்கொன்று அவளது உடலை இருகூறாக்கி ஒன்றினால் ஆகாயத்தையும் மற்றொன்றினால் பூமியையும் உண்டாக்கினன்.

ஆதிக்கிரேக்கரது கொள்கை:—முதன் முதலில் உள்ளது யாவும் அடங்கிய சொரூபமற்ற சமஷ்டியே. பிறகு காதலானது இதைக் கலக்கமுறச் செய்து இதனின்றும் பல சொரூபங்களை உண்டாக்கியது. அவ்வாறு உண்டாகியது பூமி. அதனின்று கடல், மலைகளும், பிறகு ஆகாயமும் உண்டாயின. (தொடரும்)

எங்கள் வீட்டுக்கூடம்.

கூடத்தைப் பற்றி என்ன அதிசயமிருக்கிறது, இவன் பிரமாதமாக எழுதத் தொடங்கிவிட்டானே யென்று நினையாதீர்கள். உண்மையாய் அதைப் பற்றிச் சொல்லக் கூடிய விஷயங்கள் மிகுதியாக இல்லா விடினும், அது செய்யும் உபகாரத்தைப் பார்க்கும் பொழுது கொஞ்சம் சொல்லவேண்டுமென்றுதான் ஆசையுண்டாகிறது. உபகாரம் செய்பவர்களை எளிதில் மறக்கக்கூடாதென்பது மனிதர்கள் நியாயங்களிலொன்றல்லவா? ஆகையால் நானும் இக்கூடம் புரியும் உதவிக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்கள் வீட்டிலிருப்பதெல்லாம் கூடி இக்கூடமும், இதைத்தவிர இரண்டறைகளும் தான். ஒன்று சமையலறையாய் விட்டது. மற்றொன்று என் தமையனும் அவன் மனைவியும் சயனிக்கும் அறை. இக்கூடத்தின் கிழக்கு,மேற்கான இருபுறமும்,சமையலறைக்கும், மற்றும் என் தமையன் படுத்துறங்குமறைக்கும் வாசற்படி யாய்விட்டன. தெற்குப்புறமோ ஒரு சிறு முற்றமாய்விட்டது. இவையாவும் போக, பத்தடி நீளமும், எட்டடி அகலமுமுள்ள இக்கூடத்தின் ஒரு மூலையில், வடக்கு முகமாய் சுவற்றைநோக்கி சிறு மேஜை யொன்றும் அதன் பக்கத்தில் ஒரு நாற்காலியும் போடப்பட்டிருக்கும். அதுதான் நான் காலேஜிக்குப் போகும் நேரம் தவிர பாக்கி வேளையில் உட்கார்ந்து வாசிக்குமிடம். அம்மேஜை என் தமையனறைக்குச்செல்லும் வாசற்படியண்டை யிருந்தபடியால் நான் வாசிக்கும் பொழுது மட்டுந்தான் நாற்காலி மேஜையினருகிலிருக்கும். நானெழுந்திருக்கும்பொழுது இடத்தை யடைக்காமலிருப்பதற்காக அதன் முன்புறத்தை மேஜையினுட்புறம் தள்ளி வைப்பது வழக்கம். கூடத்தின் நடுவே சிறிய அலமாரியொன்று அமைக்கப்பட்டு, அதில் காப்பி குடிக்கும் டம்ளர்களும், மற்றும் காபி மிஷன் ஒன்றும் இன்னும் சில பாத்திரங்களும், சிறு கறிகாய்க்கூடையொன்றும் வைக்கப்பட்டிருக்கும். கீழே தரையில் வாழையிலைக் கட்டொன்று அவ்வலமாரியை அளவெடுப்பதுபோல்காணப்படும். நடுவில் சிறு தொட்டிலொன்று என் தமையன் குழந்தைக்காகப் போடப்பட்டிருந்தது. தொட்டிலுக்கும் சமையலறைக்கும் மத்தியில் இரண்டடிதான் இடமிருந்தபடியால், நானும் என் தமையன் மட்டும் சாப்பிடுவதாயிருந்தால் இச்சிறு இடத்திலேயே சாப்பிடுவோம். விருந்தினர்கள் யாராவது வர நேருமாயின், அப்பொழுது அத்தொட்டிலைக் கழற்றி எதிராக இருக்கும் அறையில் பெட்டிகளின் மேல் வைப்பது வழக்கம். சாப்பிட்டான பிறகும் அங்குதான் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொள்ளவேண்டுமாகையால், என் தமையனறையிலிருந்த மற்றொரு நாற்காலியைக் கொண்டுவந்து போட்டு மேஜையின்மேலும், நாற்காலியிலுமாக உட்கார்ந்து கொள்ளுவோம். இரவில் யாராவது படுக்க வேண்டுமென்றாலோ, அம்மேஜையையும் அவ்விடத்தைவிட்டு அப்புறப்படுத்த வேண்டியதுதான். என் தமையனறையில் அதைப் போடுவோம் என்பதற்கு, அதிலாவது இடமிருந்ததா? அதில் என் தமயன் தெய்வமானதால் தான் படுத்துக்கொள்ளுகிறான். அவ்வுள்ளில் நான்கு புறமுமிருந்த சாமான்களை விவரிக்கப் புகுவோமானால், நாம் இதை எழுதத் தொடங்கி யிருக்கவே கூடாது. இதன் நடுவில் என் தமையன் குழந்தைக்கு ஆண்டுநிறைவும் வந்தது. ஆயுஷ்ய ஹோமம் செய்வதற்கும் அக்கூடந்தான். மற்றும், பிராமணர்களும், பந்துக்களும், சிநேகிதர்களும் சாப்பிடுவதற்கும் அக்கூடமேயென்றால், அது எவ்வளவு உபயோகமாயிருந்திருக்குமென்று நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். அது கூடமாயிருந்ததால் தானே அவ்விதமுதவியது? காலை வேளையில் படிப்பதற்கும், மத்தியான காலங்களில் சிரம பரிகாரம் செய்து கொள்ளுவதற்கும், சாயங்காலங்களில் சிநேகிதர்களுடன் உத்ஸாகமாய் சம்பாஷிப்பதற்கும், இராக்காலங்களில் நித்திரை செய்வதற்கும், மற்றும் விருந்தினர் வந்திருக்கும்பொழுதும் அதன் உதவியினால்தான் சமாளிக்கமுடிந்ததே யன்றி, வேறெவ்விதத்திலும் முடியாதென்பது நிச்சயமே. இதுவே ஓர் அறையாயிருப்பின், அது ஒரு போதும் இவ்வளவு உபயோகமாயிராதென்பது முற்றிலும் திண்ணம். எவ்வளவு தனவந்தனாயினும், முன் நாளில் கூடமில்லாமல் வீட்டைகட்டும் வழக்கமில்லையென்பது யாவரும் அறிந்த விஷயமே. பெரிய கலியாணங்களுக்கு அதில் முகூர்த்தம் நடத்துகிறார்கள். தாராளமாய் பல பெயர்கள் உட்கார்ந்து சேர்ந்து சாப்பிடலாம். சுத்தம் செய்தானபிறகு அவ்விடத்திலேயே வெற்றிலையும் போட்டுக்கொள்ளலாம். சங்கீதக் கச்சேரி, நலங்கு முதலான விசேஷங்களும் நடப்பதற்கு வசதியாயிருக்கும். இவ்விதமாக, அக் கூடமொன்றே பலவிதத்திலும் உபயோகப்படுகின்றது. ஆனால் மேல்நாட்டாரது நாகரீகம் பெருத்த இந்நாளில், கூடத்தைத் தவிர்த்து, 'டிராயிங் ரூம்' என்று வழவழப்பான கண்ணாடி போன்ற தளவரிசையுடனும், அழகான வர்ணம் புனைந்த சுவர்களுடனும் அறையை யமைத்து, விதம்விதமான சோபாக்களாலும், அழகிய படங்களினாலும் நிலைக் கண்ணாடிகளாலும் அலங்கரிக்கிறார்கள். அச்சோபாக்களிலுட்காரினும், அவைகள் எங்கு அழுக்கடைந்து விடுமோ வென்று அச்சமுண்டாகிறது. உயர்ந்த இரத்தினகம்பளம் விரிப்பதற்கேயன்றி அவ்வழவழப்பான அறைதரையைவேறெவ்விதம் உபயோகிக்க மனமுண்டாகும்? ஆகவே, மேல்நாட்டாரைப் போல், யாராவது வந்திருக்கும்பொழுது உட்கார்ந்து வார்த்தையாடுவதற்கு மட்டுமே தகுதியென்று தோன்றுகிறது. இரண்டறையுள்ள வீட்டில் கூடமும் 'டிராயிங் ரூமாய்' விட்டால் நாம் எங்குபோவது? பெரிய தனவந்தாகளுக்கு ஓரிடம் உபயோகமில்லாமலிருப்பினும் பெரிய குறையல்ல. எங்கள் தரித்திர தசையில், எங்கள் வீட்டுக்கூடத்தினால் நாங்கள் அடையும் சௌகர்யங்கள் விவரிக்கக் கூடாதவை. இவ்விதமேதான் நாம் மேல் நாட்டாரது வழக்கங்களை அநேக முறைகளிலனுசரித்துக் கஷ்டப்படுகிறோமென்பதில் என்ன சந்தேகம்? பணம் படைத்தவர்களைப் பார்த்து நடக்க ஆசைகொள்ளும் ஏழைகள் இன்னும் அதிகமாகவே துன்பமடைகிறார்கள். இவ்விதமாக ஒவ்வொன்றிலும் வரம்பு மீறி செலவு செய்வதினால் தான் ஏழ்மைத் தனம், வெள்ளைக்காரர்களை, நம்மவர்களைவிட அதிகமாய் வருத்துகின்றது போலும்.

இரு முறை இறந்த அரசன்.

அரசன் மரணவஸ்தையிலிருந்த அறை நிச்சப்தமாயில்லை. அநேகர் மெல்ல அடிமேல் அடிவைத்து நடந்தும் தாழ்ந்த குரலில் ஒருவரோடொருவர் பேசியும் உண்டாக்கிய சந்தடி தளர்ந்தோய்ந்து கிடந்த நோயாளியால் தாங்க முடியுமோவென்றிருந்தது. இருந்தாலும் என்ன? வைத்தியர்தாம் ஒன்றும் அவன் காதிற் படாதென்று சொல்லினரே! அவனைப் பார்த்தாலும் காது கேட்பதாகத் தோன்றவில்லை. படுக்கையருகே தலை தணிந்து முழந்தாளிட்டு வணங்கிய வண்ணம் இருக்கும் தன் அருங்காதலி விம்மி அழக்கேட்டும் அவன் முகம் கலங்காதிருக்குமோ?

பலநாட்களாய் வெய்யில் அவன் முகத்தில் வீசாதிருக்கவென்று கட்டப்பட்ட மறைவுகள் இப்போது விலகியிருந்தன. அந்தச்சந்தடியில், ஒளி மங்கும் அவனது கண்கள் கூசாவண்ணம் படுதாவை இழுத்துவிடவேண்டுமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. ஆனாலுமென்ன. வைத்தியர்தாம் அவன் விழியிணையில் யாதும் தோற்றாதெனக் கூறினரே.

வெகு நாட்களாய் அவனருகில் காத்துதவநின்ற கையாட்கள் தவிர வேறெவரும் அவனை அணுகவிடாது காத்தனர். இப்பொழுது யார் வேண்டுமென்றாலும் தடையின்றி அவ்வறையுட் புகலாம்; வைத்தியர்தாம் அவனுக்கு யாரும் அடையாளம் தெரியாதென்றனரே.

வெகுநேரம், ஏதோ ஒன்றை நாடி நீட்டியதுபோல் அவன் கை ஒருபுறமிருக்க, இராணி அதை மெல்ல எடுத்து தன் மெல்லிய கைத்தலத்தில் வைத்துத்தடவிக் கொடுத்தாள். உணர்ச்சியிருப்பதாகத் தெரியவில்லை. சற்றுப்பின் அரசனது கண்களும் வாயும் மெல்லமூடின; நாடியும் தளர்ந்துவிட்டது.

“இன்னும் முகத்தழகு விளங்குகின்றதே!” என்று அருகிருந்த சிலர் சொல்லிக்கொண்டார்கள்.

அரசனுக்கு மறுபடி பிரக்ஞை பிறந்தபோது எங்கும் நிச்சத்தமாயிருந்தது. ஆச்சரிய சுகமான அமைதியும் இருளும் எங்கும் பரவியிருந்தன.—கட்டுண்டவனை அவிழ்த்து வியனுலகில் விட்டால் திகைப்பதுபோல் சற்று நேரம்மயங்கிக்கிடந்தான். சாளரத்தின் வழியே தென்றல் குளிர்ந்து வீசிற்று. அருகிருந்த பூங்காவனத்திலிருந்து பூமணம் அறைமுற்றும் பரவிற்று. கால்மாட்டிலிருந்த சிறு விளக்குகள் மெல்லிய ஒளி வீசிநின்றன. தன்னுடலத்தை ஏற இறங்கப் பார்த்தான். வெள்ளாடையிட்டு போர்த்திருந்தனர்; இறந்தனனென்று நினைத்தார்போலும். காவற்காரரும் அயர்ந்து தூங்கினர். கடிகாரம் பதினொன்று அடித்தது. ஒருவித புன்சிரிப்போடு படுக்கைவிட்டு அரசன்மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

அறிவு முணர்ச்சியும் குன்றி உயிர் தத்தளிக்கும் தருவாயில் தன் முழு பலத்தையும் எப்படியோ ஒருங்கே திரட்டிக்கொண்டு, உலகம் தன்னை அவசியப் பொருளென வேண்டும்போது, அதற்கு உதவ விடாமல் அச்சமயமே தன்னை உலகினின்றும் கவரவந்த விதியை நொந்து, உயிர் கொண்டு செல்லும் காலனை ஒருமுறை தான் வேண்டிக்கொண்டதும், “இறந்த பின்னும் ஒரு மணியளவு உனக்கு உயிர் தருகிறேன்; அதற்குள் நீ உயிர் தரிக்க வேண்டுமென்று அவாவுறும் மனிதர் மூன்று பேர் இருப்பதாய்க் காட்டினால், உன்னை விட்டுவிடுகிறேன்” என்று காலன் தனக்கு வாக்குத்தந்ததும் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

“அப்படிக் கொடுக்கப்பட்ட வேளையல்லவா இது? இதில் கொஞ்ச நேரம் சும்மா படுத்திருந்துவிட்டேனே?” என்று எழுந்தான் அரசன். எல்லாருக்கும் நல்லவனாக நடந்துகொண்ட அரசன்; பிறருக்கு என்று பாராமல் இரவும் பகலும் பிரஜைகளுக்காக உழைத்துச்சலியாதவன். அவனுக்கு இப்போதுதான் உயிரின் அருமையும் இகவாழ்க்கையிலுள்ள சுகமும் ஒருங்கே புலப்பட்டது; இதற்குமுன் உயிர்வாழ்தல் இவ்வளவு சுகம்கொண்டதென்று அவன் நினைக்கவேயில்லை; வாஸ்தவத்தில் சற்றேனும் தன்னயம் பாராட்டாமல் பிறர்நலமே கருதி யுழைத்தவனாகையால் மரணம் விதிபோல் உற்றபோது, எடுத்த கருமங்களை அரைகுறையாய் விடுகிறோமே, என்ற பெருங்கவலை மட்டுமே அவனை வருத்தியது; உயிர் விட அவன் வருந்தவில்லை. இப்பொழுதோ, எல்லாம் மாறிவிட்டன. ‘இப்படி பாதிவேளையில் அநியாயமாய் போகின்றோமே,’ என்று அவனை புண்படுத்திய துயரம் அவன் மனம் விட்டோடியது. “ஆ! நம் செயல்கள் எல்லாம் எவ்வளவு சிறியவை, அற்பமானவை; இவை முடிந்தென், முடியாவிடினென். எவ்வளவு பெரியது உலகம்! அதில் நானொருவன் இல்லாவிட்டால் குறையாமோ?” என்ற புதிய உணர்வால் ஒருவாறு தன்னையே தேற்றிக்கொண்டான். “ஆ! என் வீடும் நாடும் நானில்லாவிடில் அழியுமென்று எண்ணியேங்கினேனே! என்ன பேதமை! அழியாது அப்படியே இன்னும் இருக்கின்றனவே.” என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, படுக்கையிலிருந்து எழுந்து அறை வாயிலையடைந்தான். “முன் எங்கு செல்லுவோம்” என்று சற்று நிதானித்து நின்று, பிறகு “இராணியிருக்குமிடம்போக ஆகாது, அவள் படும் துயரத்தைக்காண என் மனம் சகியாது” என்றான். தான் “மறு உயிர் பெற்று ஜெயித்து வந்தேன்” என்று, அவளை தன்னிருகைகளால் வாரியணைத்துத் தழுவி அவளிரு கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் மல்கச் செய்யும் போதுதான் அவளைக் காணுதல் தகும்! எல்லாம் இன்னும் ஒரு மணிக் கூறுதானே. பன்னிரண்டடிக்குமுன் இவையெல்லாம் ஒரு கனவுபோலாக, பயமின்றி மறுபடி உயிர் வாழலாமே என்று எண்ணினான். தன்னை அண்டிய அந்திய கால ஞாபகம் வரவே “இப்படியெல்லாம் இன்னுமொருமுறை மரணாவஸ்தைப்பட வேண்டுமே! சங்கரா!” என்று பெருமூச்செறிந்து தான் சற்று முன் எழுந்து வந்த படுக்கைக்கே போவானோ என்னும்படி தோன்றினான்.

“பயங்கொண்டு இதுவரை நான் ஒரு காரியமும் செய்து முடிக்காமலிருக்கவில்லை. இப்போதா பயப்படுவது?” என்று தேற்றிக்கொண்டான். தனக்கு அளிக்கப்பட்ட வரத்தை நினைக்கவே புன்சிரிப்பு உண்டாயிற்று; நிலவில் நன்கு பிரகாசித்து விளங்கியது அவன் கண் முன் அவன் அரசாட்சி புரிந்த நகர்.

“மூவருக்குப் பஞ்சமா? மூவாயிரம் கூட சுலபமாய் கிடைப்பரே! இவர்கள் அனைவரும் என் அன்பர்களன்றோ?”

வாசற் கதவைத்தாண்டி வெளியே போகும்போது ஒரு சிறு குழந்தை படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தது. அங்கிருந்த காவற்காரன் “ஏனம்மா, குழந்தாய் அழுகிறாய்” என்று அதைவினவ “ராஜா செத்துப்போய் விட்டாராம். அதற்காக அப்பாவும் அம்மாவும் அரண்மனைக்குப் போயிருக்கிறார்கள். திரும்பி வரவேயில்லை. எனக்கு நிரம்ப பசியாய் இருக்கிறது. ராத்தி

ரிக்கூட சாப்பிடவில்லை; என்னுடைய பொம்மையும் உடைந்து போய்விட்டது. ஐயோ! ராஜா பிழைக்கமாட்டாரா என்று இருக்கிறது" என்று மறுபடியும் விம்மி விம்மி அழ ஆரம்பித்தது அந்தக்குழந்தை.

அரசனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. "இதோ இதற்குள், என் பிரஜைகளுள் ஒன்று என்னை மறுபடியும் ஜீவித்திருக்க வேண்டுகிறதே" என்றான்

அவன் இன்னும் குழந்தைப்பேறு பெறவில்லை. அச்சிறுமியை எடுத்து மடியில் வைத்து சமாதானம் செய்யவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. இருந்தாலும் கையிலிருக்கும் காரியம் முடியட்டும் என்று தன் நெருங்கிய நண்பன் வீட்டிற்குப்போனான்.

அந்த அன்பன் எவ்வாறு துயரத்திலாழ்ந்திருப்பான் என்று மனதில் நினைத்துப்பார்க்கவே, அவனுக்கு ஒருபுறம் துக்கமும் சற்று சிரிப்பும் உண்டாயிற்று. "அவனுக்கிப்படி வந்திருந்தால் தன்னால் சகிக்க முடியாதே. நல்ல வேளை அவனைக் கொண்டு போகாமல் விட்டது யமன்" என்று நினைத்தான்.

தன் நண்பனுடைய வீடு வந்ததும் அங்கே எல்லாம் ஒரே குழப்பமாயிருந்தது. அங்குமிங்கும் ஜனங்கள் போய்க்கொண்டிருந்தனர். தானும் உள்ளேநுழைந்து அறைவிட்டு அறையாகச்சுற்றிப்பார்த்தான். எல்லாம் காலியாயிருந்தன. இதைக்கண்டு திடுக்கிட்டுத் தயங்கினான். துக்கம் தாங்க முடியாமல் இறந்துவிட்டாரோ நண்பன்? கடைசியாய், தன் நண்பனும் தானுமாய் பலமுறை கூடி உற்சாகமாய் காலங்கழித்த சிற்றறையடைந்தான். தன் நண்பன் அப்போதுதான் அவ்வறையைவிட்டுச் சென்றனன்போலும்; காகிதங்களும் புஸ்தகங்களும் கீழே அலங்கோலமாய் கிடந்தன. கண்ணாடிச்சில்லுகள் சிதறிக்கிடந்தன. ஒரு படம் சட்டம் ஒடிந்து கீழே கிடந்தது. அதை எடுத்துப்பார்த்தான், தன்னுடைய படம். நெருப்பைத்தொட்டவன்போல் திடீரென கையை உதறி எறிந்தான். ஏதோ கிழித்தெறிந்த காகிதத்தின் துண்டுகள் கீழே கிடந்தன. அவற்றை உற்றுப் பார்த்தான், தான் தன் நண்பனுக்குக் கடைசியாய் அன்பு மிகுந்து எழுதிய கடிதம்....

(தொடரும்)

ஆந்திர ஆயுர்வேத வைத்திய சாலை
லிமிட்டெட்.
19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.
டாக்டர். A. லக்ஷ்மிபதி
Founder and Managing Director.
சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.
கேட்டலாக்குக்கு எழுதுங்கள்.

காஞ்சீபுரம் கருடசேர்வை
விளம்பரங்கள்.
நாளது வைகாசி௴ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டு பிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வினியோகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.
MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்
அளவு 27" × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
மேற்கூரையில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர் பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.